**“சஹஸக் நிமவும்” - 2020 சர்வதேச புத்தாக்க கண்காட்சி**
**மாகாண மட்டத்தில் புத்தாக்க விழிப்பூட்டும் நிகழ்ச்சியும், புத்தாக்க தெரிவும்**

**மாகாண மட்ட புத்தாக்க போட்டியின் நிபந்தனைகளும் விண்ணப்பப்படிவம் பூர்தி செய்யக்கூடிய வழிமுறைகளும்**

**“சஹஸக் நிமவும” - 2020 சர்வதேச புத்தாக்க கண்காட்சி போட்டிக்கு**
**மாகாண மட்டத்தில் நுடாத்தப்படும் புத்தாக்க கண்காட்சிப் போட்டியின் மூலம் தெரிவு செய்யப்படுகின்றது**

**<u>மாகாண மட்டத்தில் நடாத்தப்படும் விழிப்பூட்டும் நிகழ்ச்சியும், புத்தாக்க தெரிவுப் போட்டி கால அட்டவணையும்</u>**

<table>
<tr><th rowspan="2">மாகாணம்</th><th colspan="2">விழிப்பூட்டும் நிகழ்ச்சி நிரல்</th><th colspan="2">முதல் சுற்று தெரிவு</th><th rowspan="2">விண்ணப்படிவம் ஆணைக்குழுவுக்கு அனுப்பப்பட வேண்டிய முடிவுத் திகதி</th></tr>
<tr><th>திகதி</th><th>நிலையம்</th><th>திகதி</th><th>நிலையம்</th></tr>
<tr><td>சப்ரகமுவ</td><td>2020.01.14</td><td>தொழில்நுட்பக் கல்லூரி, இரத்தினபுரி</td><td>2020.03.02</td><td>தொழில்நுட்பக் கல்லூரி, இரத்தினபுரி</td><td rowspan="4">2020.02.17</td></tr>
<tr><td>தென் மாகாணம் - ஹம்பாந்தோட்டை</td><td>2020.01.15</td><td>பிரதேச செயலகம் - அம்பலன்தொட்ட(விதாதா நிலையம்)</td><td>2020.03.04</td><td>பிரதேச செயலகம் - அம்பலன்தொட்ட(விதாதா நிலையம்)</td></tr>
<tr><td>தென் மாகாணம் - மாத்தறை</td><td>2020.01.16</td><td>தொழில்நுடப் கல்லூரி - ,மாத்தறை</td><td>2020.03.05</td><td>தொழில்நுடப் கல்லூரி - ,மாத்தறை</td></tr>
<tr><td>தென்மாகாணம் - காலி</td><td>2020.01.17</td><td>தொழிலநுட்ப கல்லூரி - காலி</td><td>2020.03.06</td><td>தொழிலநுட்ப கல்லூரி - காலி</td></tr>
<tr><td>வுடடத்திய மாகாணம் - பொலன்னறுவை</td><td>2020.01.23</td><td>ரோயல் கல்லாரி – பொலன்னறுவை</td><td rowspan="2">2020.03.10</td><td rowspan="2">தோழில்நுட்பக் கல்லூரி – அநுராதபுரம்</td><td rowspan="3">2020.02.24</td></tr>
<tr><td>வுடமத்திய மாகாணம் - அநுராதபுரம்</td><td>2020.01.24</td><td>தொழிலநுட்ப கல்லூரி – அநுராதபுரம்</td></tr>
<tr><td>வடமேல் மாகாணம்</td><td>2020.01.22</td><td>உயர் தொழில்நுட்ப நிலையம் - வில்கொட வீதி, குருநாகல்</td><td>2020.03.13</td><td>உயர் தொழில்நுட்ப நிலையம் - வில்கொட வீதி, குருநாகல்</td></tr>
<tr><td>கிழக்கு மாகாணம்</td><td>2020.02.05</td><td>சான்த மைக்கல் கல்லூரி – மட்டக்களப்பு</td><td>2020.03.16</td><td>சான்த மைக்கல் கல்லூரி - மட்டக்களப்பு</td><td rowspan="2">2020.03.09</td></tr>
<tr><td>வுடமாகாணம்</td><td>2020.02.07</td><td>தொழிநுட்கக் கல்லூரி – யாழ்ப்பாணம்</td><td>2020.03.18</td><td>தொழிநுட்கக் கல்லூரி – யாழ்ப்பாணம்</td></tr>
<tr><td>ஊவா மாகாணம்</td><td>2020.01.30</td><td>தொழில்நுட்பக் கல்லூரி - பதுளை</td><td>2020.04.27</td><td>தொழில்நுட்பக் கல்லூரி - பதுளை</td><td rowspan="2">2020.03.02</td></tr>
<tr><td>மத்திய மாகாணம்</td><td>2020.01.29</td><td>தர்மராஜ வித்தியாலயம் - கண்டி</td><td>2020.04.24</td><td>தர்மராஜ வித்தியாலயம் - கண்டி</td></tr>
<tr><td>மேல் மாகாணம் - களுத்துறை</td><td>2020.02.12</td><td>தொழிலநுட்பக் கல்லூரி – களுத்துறை</td><td>2020.04.29</td><td>தொழிலநுட்பக் கல்லூரி – களுத்துறை</td><td rowspan="4">2020.03.20</td></tr>
<tr><td>மேல் மாகாணம் - கம்பஹா</td><td>2020.02.13</td><td>பண்டாரநாயக்கா வித்தியாலயம் - கம்பஹா</td><td>2020.04.30</td><td>பண்டாரநாயக்கா வித்தியாலயம் - கம்பஹா</td></tr>
<tr><td rowspan="2">மேல் மாகாணம் - கொழும்பு</td><td rowspan="2">2020.02.14</td><td rowspan="2">தொழிலநுட்பக் கல்வி மற்றும் பயிற்றப்படும் திணைக்களம் - கொழும்பு 10 (பயிற்சி நெறி கேட்போர் கூடத்தில்)</td><td>2020.05.16</td><td rowspan="2">இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு, கொழும்பு - 08</td></tr>
<tr><td>2020.05.17</td></tr>
</table>

**<u>மாகாண மட்ட போட்டியில் பங்குகொள்ளக் கூடிய பிரிவினர்கள்</u>**

கீழுள்ள ஏதாவது **<u>ஒரு பிரிவில்</u>** உங்களுக்கு பங்கு பற்ற முடியும்.

- பாடசாலைப் பிரிவு
- பல்கலைக்கழகம் மற்றும் மூன்றாம் நிலைக்கல்வி பிரிவு
- வணிகவியல் பிரிவு
- திறந்த பிரிவு

## புாடசாலைப் பிரிவு

- பாடசாலை பிரிவைப் பொருத்தவரையில் உயர் மட்ட வயதெல்லை க.பொ.த. உயர்தர மாணவர்கள் இரண்டாம் தவணையை கொண்டிருந்தல் வேண்டும்.இவர்கள் பாடசாலை பிரிவைத் தவிர வேறு ஏதாவது பிரிவில் விண்ணப்பிக்க முடியாது.அவர்கள் பாடசாலையில் கல்வி கற்கின்ற பாடசாலையை விட்டு விலகிச் சென்றவராக இருக்கக் கூடாது .இவ்விண்ணப்பதாரி விண்ணப்ப படிவத்தின் 5ஆம் பக்கம் தவராது பூர்த்தி செய்யப்படல் வேண்டும

- பாடசாலைப் பிரிவில குழு அடிப்படையில் குறைந்த பட்சம் 02 மாணவர்களை கொண்டதாக இருக்க வேண்டும்.

- பாடசாலை பிரிவில் குழு அடிப்படையில் போட்டியிடுகின்ற போது இருவரும் பாடசாலை மாணவர்களாக இருப்பதோடு, இன்னொரு பிரீன் மாணவனை குறிப்பிட்ட குழுவில் அங்கத்தராக சேர்த்துக்கொள்ள முடியாது.

புாடசாலை மாணவர்கள் தமது பாடசாலை பருவத்தை நிரூபிக்க முடியாத பட்சத்தில் உங்கள் புத்தாக்கம் பாடசாலை பிரிலில் கனிப்பிடாமல் அவை திறந்த புத்தாக்க போட்டியில் சேர்த்துக்கொள்ளப்படும்.

## பல்கலைக்கழகம் மற்றும் மூன்றாம் நிலைக் கல்வி பிரிவு

- பல்தலைக்கழக மற்றும் மூன்றாம் நிலைக்கல்வி பிரிவினரைப் பொருத்தவரையில், பல்கலைக்கழக மாணவர்களைப் பொருத்தவரையில் அவர்கள் தற்போது மாணவர்கள் என்ற அடிப்படையில் முதலாவது பட்டத்தை பெறறிருப்பதோடு, மூன்றாம் நிலை கல்வி மாணவர்களைப் பொருத்தவரையில் அவர்கள் தற்போது தொழில்நுட்பக் கல்லுரியில் கற்கை நெறியை பயிலுகின்ற மாணவர்களாக இருத்தல் வேண்டும்.

- இந்த இரு பிரிவினரும் தமது பல்கலைக்கழக, மூன்றாம் நிலைக்கல்வி பிரிவைத் தவிர வேறு பிரிவுகளில் போட்டியிட முடியாது

- இவ்வாறான மாணவர்கள் தமது விண்ணப்பத்தோடு தமது கல்வி நிலையத்தினால் விநியோகிக்கப்பட்டுள்ள அடையாள அட்டையின் பிரதியொன்றை இணைக்கப்படல் வேண்டும்.

- புத்தாக்க போட்டி சம்பந்தமாக பல்கலைக்கழக கலாநிதி அவர்களுக்கும் குழவாக இணைந்து போட்டியில் பங்கு கொள்ள முடியும்.

பல்கலைக்கழக மற்றும் மூன்றாம் நிலைக்கல்வி மாணவர்கள் தமது கல்வி நிறுவனத்தின் மூலம் தமது மாணவர் உறுதிப்பாட்டை முன்வைக்க தவறும் பட்சத்தில் உங்கள் விண்ணப்பம் திறந்த போட்டியில் சேர்த்துக்கொள்ளப்படும்.

## வணிகவியல் பிரிவு

- வணிகவியல் பிரிவைப் பொருத்தவரையில் அவர்கள் முதலில் அவர்கள் ஆக்கவுரிமைப் பத்திரத்தை பெற்றிருத்தல் அல்லது அவற்றுக்கு விண்ணப்பித்துள்ளவைக்கான அத்தாட்சிகள், மற்றும் அவை வணிகவியல் பொருளாகவும் இருத்தல் வேண்டும். மேலும் வியாபாரத்தின் தன்மை, போக்கு, வளர்ச்சி, வருடாந்த வருமானம், ஏற்றுமதித் தன்மை போன்றவற்றை உறுதிப்படுத்துவதற்கான பிரதிகளை நடுவர்களுக்கு சமர்ப்பிப்பது கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது.

## திறந்த பிரிவு

- மேலே கூறப்பட்டுள்ள பிரிவினர்களைத் தவிர மற்ற எல்லா புத்தாக்குனர்களுக்கும் இத்திறந்த போட்டியில் பங்கு கொள்ள முடியும்.

## விண்ணப்பப்படிவம் சமர்ப்பிப்பதற்கான பொவான நிபந்தனைகள்

இலங்கை புத்தாக்குனுரு ஆணைக்குழுவனால் முன்வைக்கப்பட்டுள்ள பிரிவில் தமக்கு பொருத்தமான பிரிவில் விண்ணப்பிக்காமல், வேறொரு பிரிவில் விண்ணப்பிக்கும் பட்சத்தில் அவை இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவினால் நிராகரிக்கப்படும்.

உங்களால் முன்வைக்கப்படவுள்ள ஒவ்வொரு ஆக்கங்களுக்கும் ஒவ்வொரு விண்ணப்பம் அனுப்பப்படல் வேண்டும்.மேலும் ஒரு புத்தாக்கத்துக்கான விபரம் அளவுக்கதிகமாக முன்வைக்கப்படும் பட்சத்தில் அவ்விண்ணப்பம் நிராகரிப்பதற்கு காரணமாக அமையலாம்.

குழு அடிப்படையில் புத்தாக்கம் சமர்ப்பிக்கும் பட்சத்தில் விண்ணப்பத்தில் யாருடைய பெயர் குறிக்கப்பட்டிருக்கின்றதோ அவரே அக்குழுவின் தலைவராக கனிக்கப்படுவதோடு, மற்ற நபரின் விபரம் விண்ணப்பத்தோடு இணைக்கப்படல் வேண்டும். ஆக குழுவில் அடங்கியுள்ள அங்கத்தவர்கள் சம்பந்தமாக ஏதாவது மாற்றங்கள் அல்லது தகவல் பின்னர் கிடைக்கும் பட்சத்தில் அவை ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

இதற்கு முன்னம் சஹசக் நிமவும் தேசிய புத்தாக்க போட்டியில் வெற்றியீட்டிய புத்தாக்கங்ள் இம்முறை மாகாண போட்டிக்கு மீண்டும் கொண்டுவரப்படும் போது அவை ஏதாவது மாற்றமின்றி கொண்டுவரப்படும் பட்சத்தில் அவ்வாறான ஆக்கங்களும் நிராகரிக்கப்படும்.

புத்தாக்க போட்டியின் போது உங்கள் புத்தாக்கம் சம்பந்தமாக விபரங்களை தெளிவான முறையில் நடவர்களுக்கு முன்வைக்கப்படல் போட்டியாளர்களின் பொறுப்பாகும்.

இந்நிபந்தனைகளுக்கு ஔவாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

பூர்த்தி செய்யப்பட்ட உங்கள் விண்ணப்பத்தை “சஹசக் நிமவும் மாகாண போட்டி 2020” என கடித உரையின் இடது பக்க மேல் மூலையில் குறிக்கப்பட்டு ஆணையாளர்,இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு, இல.46-48, கொட்டா வீதி, கொழும்பு -08 என்னும் முகவரிக்கு முடிவுத்திகதிக்கு முற்பாடு அனுப்பப்படல் வேண்டும்.

ஓவ்வொரு விண்ணபதாரியும் தனிப்பட்ட முறையில் பொறுப்புடையவராக இருப்பதோடு, முடிவுத்திகதிக்கு பின்னர் கிடைக்கப் பெறுகின்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவது ஒரு போதும் ஆணைக்குழு பொறுப்பு கூறுவதில்லை.

விண்ணப்பப்படிவம் பூர்த்தி செய்யப்பட்டு ஆணைக்குழுவிற்கு அனுப்பியதன் பின்னர் ஏதாவது மாற்றங்கள் செய்திருந்தால் அத்திருத்தங்களை ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

- ❖ **மாகாண புத்தாக்க போட்டிக்கு குறிப்பிட்ட தினத்திற்கு முன்னர் விண்ணப்பிக்க தவறும் பட்சத்தில் தங்கள் விண்ணப்பங்களை மாகாண புத்தாக்க தெரிவு தினத்தென்று சமர்ப்பிக்க முற்படுவது உங்கள் விண்ணப்பம் எக்காரணத்தைக் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.**
- ❖ **விண்ணப்பிக்கப்பட்டுள்ள சகரும் இங்கு நேர அட்டணையையில் குறிக்கப்பட்டுள்ள குறித்த தினத்திற்கு சமூகம் கொடுக்கப்படல் வேண்டும். ஆக மீண்டும் இவை சம்பந்தமாக ஆணைக்குழு அறியத்தருவதில்லை. ஏதாவது உங்களுக்கு நேரிட்டால் அவை சம்பந்தமாக எமக்கு முன்னமே அறியத்தரல் வேண்டும்.**

## புலமைச் சொத்தின் உரிமையாண்மை

உங்களால் புத்தாக்கப் போட்டிக்கு புத்தாக்கம் முன்வைக்கும் சந்தர்ப்பத்தில் அவை உமக்கு சொந்தமான புதிய பூரண ஆக்கமாக இருத்தல் வேண்டும். மேலும் அப்புத்தாக்கமானது இன்னொரு நபரினால் கண்டுபிடிக்கப்பட்ட ஆக்கமாக இருக்கக் கூடாது. ஆக அவ்வாறு முன்வைக்கப்பட்ட ஆக்கம் இன்னொருவருடைய ஆக்கமாக தெரிய வந்தால் தங்கள் வெற்றி பெற்றாலும் உமக்கு கிடைக்கப் பெற்ற பதக்கம், சான்றிதழ், போன்றவற்றை சுவீகரிப்பதற்கு ஆணைக்குழுவானது பொறுப்புடையதாக உள்ளது.அவை யாவும் அவை

**போட்டியும் நடுவர்கள் தெரிவும்**

ஆணைக்குழு மூலம நியமிக்கப்பபட்டுள்ள நடுவர்கள் மூலம் தங்கள் புத்தாக்கம் பரிட்சிப்பதோடு, அவர்களின் தீர்ப்பே இறுதித் தீர்ப்பாகும். விழிபபூட்டும் நிகழ்ச்சி மற்றும் புத்தாக்க முதல் சுற்று தெரிவு செய்வதற்கான திகதி மற்றும் இடம் மற்றும் ஏணைய விடயங்கள் தொடர்பாக மாற்றங்களை மேற்கொள்வதற்கான அதிகாரம் ஆணைக்குழுவவுக்கு மாத்திரம் உண்டு.

**போட்டியில் பங்கு பெறுவதற்கான தொழில்நுட்ப பிரிவுகள்.**

கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொழில்நுட்ப பிரிவை அடிப்படையாகக் கொண்டு உங்கள் ஆக்கத்துக்கு பொருத்தமான தொழில்நுட்ப பிரிவை தெரிவு செய்து கொள்ள முடியும்.

- மக்கள் பாதுகாப்பு, நலன்புரி மற்றும் தேசிய பாதுகாப்பு
- இரசாயண விஞ்ஞானம்
- உணவு தொழில்நுட்பம்
- மருத்துவ வஞ்ஞாமும் ஆயுர்வேதமும்
- யூணானி மருத்துவம்
- கைத்தொழில் மற்றும் அடிப்படை வசதி
- பௌதிகவியல் பொறியியலாளர்
- தொடர்பாடல் தொழில்நுட்பம்
- கமநல சேவை
- கணிதவியல்
- சக்தி
- சூழல் பாதுகாப்பு
- போக்குவரத்து
- பொறியியலாளர்